★ விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 26 பங்குனி 10 ஜ. ஆகிர் 8 இதழ் 42

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24—3—83

ஆரம்பமாகின்றது!
26-03-83 மு. ப. 9-00 மணி
CHARTERED LICENTIATE
தகுதிச் சான்றுப் பத்திரப் பரீட்சை
1984 MARCH
By. Chartered Accountants
பட்டயக் கணக்கறிஞர்களது
வகுப்புகள்
அனுமதி வரையறையுடையது.
K.G'S INSTITUTE
(இலங்கை வங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
[6636]

பல்கலை கழகத்தில் தமிழக அறிஞர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை தமிழ்த்துறையின் சார்பில் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் எம். இராமகிருஷ்ணன், சிதம்பர ரகுநாதன், இராஜம் கிருஷ்ணன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

மகாதேவா தாம்போதி அமைப்பு

பிரதமர் ரூ. 30 லட்சம் ஒதுக்கினார்!

'அமிர்' கோரிக்கைக்கு உடன் பலன் கிடைத்தது!

(கொழும்பு)

மகாதேவா தாம்போதிக்கு முப்பது லட்சம் ரூபாவைப் பிரதமர் ஒதுக்கியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

மகாதேவா தாம்போதி குறித்து நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசியதற்கு உடனடிப் பலன் கிடைத்துள்ளதாகவும், 30 லட்சம் ரூபா ஒதுக்கியது பற்றி பிரதமர் தனக்கு ஒரு குறிப்பு அனுப்பியுள்ளதாகவும் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மேற்படி பணத்தை, பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்குப் புறம்பாக, தனியாக ஒதுக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகையாளர் தாக்குதல்:

முழு அளவு விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

கொத்மலையில் இரு பத்திரிகையாளர்கள்மீது பொலிசார் தாக்குதல் நடத்தியதுசம்பந்தமாக முழு அளவிலான விசாரணை நடத்தும்படி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

'ஐலண்ட்', 'டிவயின' ஆகிய உபாலி குறூப் நிறுவனத்தின் பத்திரிகைகளில் பணியாற்றும் பிரசாத் குணவர்த்தன, தர்மரத்தின விஜயசுந்தர ஆகிய இருவரையும் கம்பளை நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கோஷ்டியொன்று தாக்கியதாம்.

கொத்மலையில் ஜனாதிபதி கலந்துகொண்ட வைபவம் ஒன்றின்போதே இச்சம்பவம் நடந்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பளை பொலிஸ் கோஷ்டியினரால் கைதுசெய்யப்பட்ட இந்த இருவரும் கம்பளை மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு 500 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர். மார்ச் 30ம் திகதி மீண்டும் கோர்ட்டில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டனர்.

எஸ். பி. தரத்திலுள்ள உயர் பொலிஸ் அதிகாரிகள் இத்தாக்குதல் சம்பந்தமான முழு அளவிலான விசாரணையை நடத்துவரெனத் தெரியவருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாரட்சி, அத்தனகல்ல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோரால் இத்தாக்குதல் பிரச்னை பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

[8ம் பக்கம் பார்க்க]

கணவனின் கத்திக்குத்துக்கு மனைவி பலி!

[மாவிட்டபுரம்]

பிரிந்து வாழ்ந்த மனைவியைச் சமாதானமாக்குவதற்குச் சென்றபோது ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து கணவனின் கத்திக்குத்துக்கு மனைவி பலியானார்!

மயிலிட்டியைச் சேர்ந்த 5 பிள்ளைகளுக்குத் தாயாரான இரத்தினகாந்தி அம்மா (35-வயது) என்பவரே கத்திக்குத்துக்குப் பலியானவராவார்!

சந்தேகநபரான கணவர் நாகலிங்கம் விஜயரத்தினம் (38-வயது) தலைமறைவாகி உள்ளார்.

பிரிந்து வாழ்ந்த மனைவியுடன் சமாதானமாகப்பேச விரும்பிய கணவர் தமது சகோதரியுடன், அளவெட்டியில் மனைவி வசித்துவந்த வீட்டிற்குச் சென்றதாகவும் அப்போது கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கணவன் மனைவியைக் கத்தியால் குத்தியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கத்திக்குத்தைத் தடுக்கச் சென்ற மகனுக்கும் காயமேற்பட்டுள்ளது.

சந்தேகநபர் சென்றகாரைப் பொலிசார் பொறுப்பேற்றுள்ளனர். கார்ச் சாரதி செல்லபா தம்பிராசாவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் விசாரணையை மேற்கொண்டுள்ளார். காங்கேசன்துறைப்பொலிசார் விசாரணை செய்கின்றனர். [க]

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் மே மாதத்தில் நடைபெறும்

பிரதமர் அறிவிப்பு

[கொழும்பு]

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் மேமாதத்தில் நடைபெறும் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீது நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே பிரதமர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

''உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் மே மாதம் 31-ம் திகதியுடன் முடிவடைகிறது. மேமாத இறுதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும்.'' என்று பிரதமர் கூறினார். (இ)

'நவம்' யோசனை ஆராயப்படும்

பாராளுமன்றத்தில் அமைச்சர் 'இராசு'

(கொழும்பு)

''பனை வளர்ப்புப்பற்றி இதுவரைகாலமும் எவரும் அதிககவனம் செலுத்தவில்லை. பயனுள்ள திட்டங்களை வகுத்து எனது அமைச்சு இப்பொழுது சில நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. பருத்தித்துறையிலும் மட்டக்களப்பிலும் விரைவில் மாதிரி பனந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன''.

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மீது நடந்த குழுநிலை ஆய்வின்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் திரு. செ. இராசதுரை கூறினார்.

அமைச்சர் மேலும் பேசுகையில், புதிதாகப் பனந்தோட்டச் செய்கைகளில் ஈடுபடுகிறவர்களுக்கு மான்யம் கொடுக்க வேண்டுமென்று சாவகச்சேரி உறுப்பினர் நல்லதொரு யோசனையைத் தெரிவித்தார். இந்த யோசனை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

பனை மரங்களையும் தென்னை மரங்களைப் போன்று குறுகிய காலத்தில் பயன்தரக்கூடிய வகையில் வளர்த்தெடுப்பது பற்றி ஆய்வுகளை நடத்தும்படி அதிகாரிகளைக் கேட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுத் திற

(8-ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்றத்தில்

பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவருக்கு பாராட்டு

(கொழும்பு)

''தெங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சங்கங்கள், அவற்றின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு பிரச்னைகள் குறித்து மிகுந்த அனுபவம் வாய்ந்த ஒருவர் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டு அது மிகவும் நன்றாகச் செயல்படுவது பாராட்டப்படவேண்டிய விஷயமாகும். தலைவர் திரு. கே. நடராசாவின் சேவையை நாம்

[8-ம் பக்கம் பார்க்க]

சரி விளம்பரம்

பயிற்சி

3 மாத எலக்றிக்கல் வயறிங் டிப்ளோமா பகல் நேர - வார இறுதி பயிற்சி வகுப்புகள் 28-03-1983 ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 11, B Momsac Building Stanley Road, Jaffna. 6607

தேவை

எமது ஸ்தாபனத்திற்கு நகை விற்பனையாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். செல்லையா இந்திரசித்து உரிமையாளர் லலிதா ஜுவலரி 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 6612

G.C.E. O/L சித்தியடைந்த ஓரளவு ஆங்கில அறிவுள்ள தட்டச்சு, சுருக்கெழுத்துத் தெரிந்த காசாளர் தேவை. விண்ணப்பதாரர் தகுதிச்சான்றிதழுடன் 27-3-83 ஞாயிறு மாலை 3 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கவும் பதவி வெற்றிடங்கள் சுன்னாகம், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம். சமூகமளிக்க வேண்டிய முகவரி: Jeyem's Institute, பதிவு இல: 13777, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 6623

விற்பனைக்கு

சிவன்பண்ணை வீதியில் [நெற்பரப்பு] மூன்று பரப்பு காணி எல்லா வசதியும் கொண்ட கல் வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. ரட்ணசிங்கம் 51, சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம். 6608

கைதடிச் சந்தியில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் மானிப்பாய் வீதியில் ஏழு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் சு. இராமநாதன், கைதடி தெற்கு, கைதடி. 6611

100 வீதம் மறுசீரமைக்கப்பட்ட HONDA - C - 90 1979-ம் ஆண்டு மொடல் மோட்டார் சைக்கிள் மிகச் சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. விசேஷ விலைக் கழிவு கொடுக்கப்படும். தொடர்பு கொள்க: N சுசந்திரராஜா, இல: 3, கோவில் வீதி, (வேதக்கோவிலருகில்] நுணாவில் மேற்கு, நுணாவில், சாவகச்சேரி. 6624

4 அறைகள், மாபிள் நிலம், காற்றுடி, பைப் வசதிகள் கொண்ட நவீன புதிய வீடு 1 பரப்பு 5குளி காணியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 834, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6629

E. L. F. டீசல் வான் இலக்கம் 28 ஸ்ரீ 3524 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். மணியம்ஸ், 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23545. 6631

WANTED

Wanted Financial Partners to Start an Industrial Complex in The Northern Province For: details please write Advt. No 6626, C/o, Eelanadu, Jaffna. 6626

புங்குடுதீவு அணைப்பாதை துரித முன்னேற்றம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவின் வடபகுதியில் வருடாவருடம் கடல்நீர் உட்புகுவதால் அழியும் பயிர்களைக் காப்பதற்காகவும் பாணவிடை சிவன் தேவஸ்தான யாத்திரிகர்களுக்குப் பாதைவசதியளிக்கவும் நன்னீரைத் தேக்கவும் ஒன்றரை மைல் தூரத்திற்கு 12 அடி அகலத்தில் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தினர் சிரமதானம் மூலம் அமைத்துவரும் அணைப்பாதை தற்போது அறுநூறு அடிகளைத் தாண்டிவிட்டது. இருபது நாள் தொடர்ந்தேர்ச்சியாக நடைபெற்ற இவ்வேலையின் துரிதப்பெறுபேறு மக்கள் மத்தியில் பெரும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

இச்சிரமதானப்பணி தினமும் நடைபெறுவதோடு இளைஞர்களும் யுவதிகளும் உற்சாகத்தோடு பங்குபற்றிவருகின்றனர்.

இச்சிரமதானப் பணியில் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தினருக்கு உதவியாக ஊரதீவு தமிழ்மாதர் கழகத்தினரும், மடத்துவெளி சனசமூக நிலையத்தினரும் பாணவிடை சிவன் தேவஸ்தான பரிபாலன தர்மகர்த்தா சபையினரும் செயற்பட்டுவருகின்றனர்.

கேள்விப் பத்திர அறிவித்தல்

கறுப்பு - பியர் போத்தல் (¾ போத்தல் அளவு கொண்டது) கொள்வனவு செய்யப்படும். விபரங்கட்கு கீழ்க் காணும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். ஒரு போத்தல் விலையையும் குறிப்பிட்டு விண்ணப்பங்களை 30-3-83க்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

பதில்
பொதுமுகாமையாளர்,
தெ. ப. பொ. உ. வி.
கூ. சங்கம்,
6630 ஊர்காவற்றுறை.

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

மானிப்பாயைச் சேர்ந்த தில்லையம்பலம் தியாகராஜா பெண் சௌந்தரம் என்பவரின் மரணச் சொத்துக்களின் விடயத்தில்

— இறந்தவர்

மரணசாதன நியாயாதிக்கம் தத்துவம் / 3598

தியாகராஜா ராஜதுரை,
41, தர்மபால மாவத்தை,
கொழும்பு-3.

— மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்தவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1982-ம் ஆண்டு ஆனி மாதம் 4-ஆம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக்காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1982-ம் ஆண்டு சித்திரை மாதம் 2-ம் நாளாகிய இன்று திகதியிடப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

வரைவு:
இ. கமலநாதன்,
மனுதாரரின் சட்டத்தரணி

காரணம் காட்டும் திகதி 8-4-1983க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

(6628)

மோதுண்டு இறந்த பெண் யார்?

[யாழ்ப்பாணம்]

சுண்டிக்குளியில் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியில் காரினால் மோதுண்டு, யாழ். ஆஸ்பத்திரியில் மரணமான அறுபது வயது மதிக்கத்தக்க இனம் காணாத பெண்ணொருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. அப்பெண் சிவப்புக் கரைச்சேலை அணிந்துள்ளார். கழுத்தில் சங்கிலியிருக்கிறது அத்துடன் செபமாலையொன்றும் அவரிடம் இருந்தது. மூக்குக்குக் கண்ணாடியும் அணிந்திருந்தார்.

இன்றைய பலன்

பங்குனி மாதம் 10-ம் திகதி

வியாழக்கிழமை

(24—3—83)

மேடம்: கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம். பணலாபமுண்டு. இனபந்துக்களின் தொடர்புஉண்டு.

இடபம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகிறது நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். கணவன் மனைவி உறவு முறைகள் பலப்படும்.

மிதுனம்: பணமுட்டம் வட்டமிடும். தொழில் துறையில் முட்டுக்கட்டை தோன்றக்கூடும், கடிதமொன்று கவலையைத் தரலாம், செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும்.

கடகம்: குடும்பத்தில் சுகக்குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலினால் கவலை உருவாகும், அவசரப் போக்கினால் பிறரைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

சிங்கம்: முக்கியமான சந்திப்பு இன்று கிடைக்கும், முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், கற்றதனால் பயனும் உண்டு. சாஸ்திர வழியில் மகிழ்ச்சி உண்டு.

கன்னி: திட்டமிட்டுச்செயல்பட விரும்புவீர்கள், எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு, நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவர்.

துலாம்: எல்லாத் துறையிலும் அபிவிருத்தி காணப்படும், மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக்கிடமுண்டு. வாகனம் ஓட்டுவோர் நன்மை அடைவர்.

விருச்சிகம்: நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும், புதிய முயற்சிகள் இன்று கைகூடும், பேச்சு வன்மையின் மூலம் பொதுத்துறையில் புகழ் அடைவார்கள்.

தனு: இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவர், மாற்றத்துக்கு இடமுண்டு. எனினும் இருள் சூழ்ந்தநிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படும் அடக்கம் நன்று.

மகரம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள், இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்கு சிறந்த பலனை அளிக்கும், சகோதர நன்மை உண்டு.

கும்பம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம், தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும், மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள்

மீனம்: தெய்வ நம்பிக்கை மேல் ஓங்கி நிற்கும், சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம், பெற்றோர் வழித்தனதானிய விருத்தி உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

ஏப்ரல் மாதம் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

1. எலக்றிக்கல் என்ஜினியரிங் ரூபா 450/-
2. மோட்டார் மெக்கானிசம் (Motor Mechanism) ரூபா 510/-
3. வெல்டிங் ரூபா 600/-

கட்டணம் மூன்று தவணைகளில் கட்டலாம்.

நிர்வாகி,

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்,

59, சென். பற்றிக்ஸ் றேட், யாழ்ப்பாணம்.

[6609]

நன்றி நவிலல்

கதிரவேலு வீரகத்திப்பிள்ளை

அமரர் கதிரவேலு வீரகத்திப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும், மலர் வளையம் சாத்தியும், அவர் நினைவாகப் பிரசுரங்கள் வெளியிட்டும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும், ஒத்துழைப்புகள் அளித்தும் இறுதி அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி, மகள், மருமகன், மாமி.

தோப்புக்காடு, காரைநகர். [6622]

ஓம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துந்துபி வருடம் பங்குனித்திங்கள் 14-ம் நாள் (28-03-1983) திங்கட்கிழமை மதியம் 11 மணி 30 நிமிடம் முதல் 12 மணி 30 நிமிடம் வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எமது புத்திரி
திருநிறைசெல்வி
லோகேஸ்வரி
அவர்கட்கும்

எனது புத்திரன்
திருநிறைசெல்வன்
நந்தகுமாரன்
அவர்கட்கும்

திருவருள் நலத்தினால் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. க. ஜெயக்கொடியும்
பாரியாரும்
கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

திருமதி
சி. கணபதிப்பிள்ளை
'சர்வமங்கள வாசம்',
துன்னாலை.

✶ தனிப்பட்ட அழைப்புகள் இல்லை ✶

(6625)

சகோதரர்களின் சாதனை

(வசாவிளான்)

அண்மையில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் செல்வன் எஸ். ஸ்ரீகுகன் செல்வி எஸ். ஸ்ரீசுமதி ஆகிய இரு சகோதரர்களும் முறையே 17 வயதிற்குட்பட்ட ஆண்கள்பிரிவிலும், 15 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவிலும் 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் ஆகிய மூன்று போட்டிகளிலும் முதலாவது இடங்களைப்பெற்று சம்பியன் கேடயங்களை அன்றைய விளையாட்டுப் போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடற் பயிற்சிக் கல்வியதிகாரி திரு வி. தம்பராசாவிடம் பெற்றுக்கொண்டார்கள். இவ்விரு சகோதரர்களில் செல்வன் எஸ். ஸ்ரீகுகன் கடந்த 5 வருடங்களாகத் தொடர்ச்சியாகவும், செல்வி எஸ். ஸ்ரீசுமதி கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ச்சியாகவும் சம்பியன் வெற்றிக் கேடயங்களைப் பெற்று வருகின்றனர்.

இவர்கள் இருவரும் பிரபல விளையாட்டு வீரரும். கொக்குவிலை இருப்பிடமாகக்கொண்டவரும், குப்பிளான் சந்தியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு எம். எஸ் ஸ்ரீகாந்தன் தம்பதிகளின் மூத்த புதல்வனும் புதல்வியுமாவர். (அ)

நயினாதீவில்

மின்னொளியில் கரபந்தாட்டம்

(நயினாதீவு)

நயினாதீவில் இம்மாதம் 27ம் திகதி மாலை மின்னொளியிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆரம்பமாகிறது. ஸ்ரீகணேச சனசமூக நிலையத்தினர் இரண்டாவது ஆண்டு சுற்றுப் போட்டியாக இதனை நடத்துகின்றனர்.

இப்போட்டியில் குழுவில் 6 பேரைக் கொண்ட 10க்கும் மேற்பட்ட தீவுப்பகுதி விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்கின்றன. போட்டிக்கான நடவடிக்கைகளை நிலையச் செயலாளர் இ. பேரின்பநாதன் மேற்கொண்டுவருகின்றார். (அ)

''தமிழகத்துக்கு வறட்சி நிவாரணமாக அரிசி, கோதுமை உடன் வேண்டும்!''

இந்திய பாராளுமன்றில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 50 உறுப்பினர்கள் வலியுறுத்து!

புதுடில்லி மார்ச் 23

தமிழ்நாடு அரசுக்கு வறட்சி நிவாரணமாக ஒரு லட்சம் தொன் அரிசி இருபதாயிரம் தொன் கோதுமை வழங்கப்படவேண்டுமென்று இந்தியப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் பலா வலியுறுத்தினர்.

பல்வேறு அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் ஐம்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப்பாராளுமன்றத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் இவ்வாறு வலியுறுத்தினர்.

தமிழ்நாட்டில் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் விவசாயிகள் பலர் அம்மாநிலத்திலிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனரென்றும், குடிநீர்த்தட்டுப்பாடு மிகமோசமாக அங்கு நிலவுவதாகவும் அந்த உறுப்பினர்கள் பிரதமரிடம் மேலும் தெரிவித்தனர்.

அரிசி, கோதுமை ஆகியன பெருமளவில் உடனடியாக தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டுள்ள இதேவேளை தற்போது தமிழகத்துக்கு மத்திய அரசால் வழங்கப்படும் ஐயாயிரம் தொன் அரிசி போதுமானதல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது இவ்வாறிருக்க தமிழ்நாட்டில் வறட்சி நிவாரண வேலைகளை மாநில அரசு தீவிரமாக மேற்கொண்டுவருகிறது. தண்ணீர் பற்றாக்குறை நிலவுவதால் சாராய உற்பத்தியை ஆறு மாதங்களுக்கு நிறுத்த வேண்டுமென்றும் தமிழக சட்டசபையில் உறுப்பினர் ஒருவரால் யோசனை தெரிவிக்கப்பட்டது. (கி)

இந்தியாவில் சர்வதேச ஒலிம்பிக்கமிட்டி மகாநாடு

புதுடில்லி,மார்ச்,23

சர்வதேச 'ஒலிம்பிக்' கமிட்டியின் மகாநாடு புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இம் மகாநாட்டை முன்னிட்டு இந்தியா புதிய முத்திரையொன்றை

[7ம் பக்கம் பார்க்க]

'ஜல்லிகட்டு' ஆட்டம்

37பேர்படுகாயம்; 6பேர் நிலை கவலை!

மதுரை,மார்ச்,23

'ஜல்லிகட்டு' விளையாட்டில் ஈடுபட்டதில் முப்பத்தியேழுபேர் படுகாயமடைந்தனர். மதுரை மாவட்டத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

படுகாயமடைந்தவர்கள் மதுரை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

'ஜல்லிக்கட்டு' தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றாகும். காளை மாடொன்றில் நீண்ட கொம்புகளில் ஒரு தொகைப்பணத்தை முடிந்து கட்டியபின் அம்மாடு துரத்தி விடப்படும். இதனைத் தொடர்ந்து அம்மாட்டினை மடக்கிப் பிடித்து அதன் மூர்க்கத்தை அடக்குபவர்களுக்கே அதன் கொம்பில் கட்டிவிடப்பட்ட பணம் பரிசாக வழங்கப்படும்.

இந்த விளையாட்டில் தனிநபராகவும், கூட்டமாகவும் ஆட்டக்காரர்கள் கலந்து கொள்வதுண்டு! (கி)

வளர்முக நாடுகளுக்கு கூடுதல் கடன் வசதிகள்!

வாஷிங்டன், மார்ச், 28

சர்வதேசநாணய நிதிக்கான அமெரிக்காவின் பங்களிப்பை 840 கோடி டாலர்களாக அதிகரிப்பதை காங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டுமென்று அமெரிக்க நிர்வாகம் கேட்டுள்ளது.

அமெரிக்க செல்வாக்கின்கீழ் உள்ள சர்வதேச நாணய நிதியின் தலைவர்கள் இந்த நிறுவனம் வழங்கும் கடன்களைப் பகுதியாக அதிகரிப்பது என்று எடுத்த முடிவைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிதிகள், பெரும் கடன் சுமையால் அவதிப்படும் வளர்முக நாடுகளுக்குக் கடன் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

சமீபத்திய வருடங்களில் வளர்முக நாடுகளது வெளிநாட்டுக் கடன் பிரச்சினைகள் பெருமளவில் உக்கிரமடைந்துள்ளது. இன்று இவற்றின் ஒட்டுமொத்த கடன் சுமார் 60000 கோடி டாலர்களாக அதிகரித்துள்ளது. இக்கடன்களில் பாதிக்கு மேற்பட்டவை மிகப்பெரிய தனியார் வங்கிகளிடம் பட்டவையாகும்.

அமெரிக்க நிர்வாகத்தின் கோரிக்கையை அமெரிக்க காங்கிரஸ் சபை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளவில்லை. திரு.ஜெரி லூயின் போன்ற பல காங்கிரஸ் எம் பி க்கள், அமெரிக்க நிர்வாகத்தின் இந்தக் கோரிக்கை, தனியார் வங்கிகள் பெரும் லாபமீட்டவே உதவுகிறது என்று எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

'வோல்ஸ்ரீட்' சஞ்சிகை ஒன்றில் காங்கிரஸ் எம்பியான திரு. லூயிஸ் எழுதுகையில் பெருவங்கிகள், ''தாமதமாகும் கடனுக்காகப் பெரும் தொகைகளைப் பெறுவதுடன் தமது வங்கி வீதத்தையும் உயர்த்தி விடுகின்றன'' என்று எழுதுகிறார்.

வளர்முகநாடுகளைப்பொறுத்தவரை கடந்த சில வருடங்களாக, சர்வதேச நாணய நிதி அமைப்புக் கடன் வழங்குவது தொடர்பாக கடுமையான போக்கையே கடைப்பிடித்து வந்துள்ளது. இந் நாடுகளின் நாணயங்களின் பெறுமதியைக் குறைக்குமாறு வற்புறுத்தியதுடன் பொது சுகாதாரம், கல்வி, சமூக பேணல் ஆகியவற்றை வெட்டிக் குறைக்குமாறும் வலியுறுத்தியது.

இந்திய வம்சாவழியினர் வாழ்ந்த

16 குடிசைகள் தீக்கிரை!

ஜனாதிபதிக்குப் புகார்

[திருகோணமலை]

இந்திய வம்சாவழியினர் வாழ்ந்து வந்த பதினாறு குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளியிலிருந்து பத்துமைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்திலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது!

காந்தீய அமைப்பின் உதவியுடன் இந்திய வம்சா வழியினர் சிலர் இக்கிராமத்தில் குடிசைகள் அமைத்துவாழ்ந்து வந்தனர் என்றும். திடீரென வந்த சிலர், பதினாறு குடிசைகளை தீவைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

உலக குழந்தைகளுடன் இந்திரா!

புதுடில்லி, மார்ச் 23

பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த பன்னிரெண்டு குழந்தைகள் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை நேற்று புதுடில்லியில் சந்தித்தனர்.

இக்குழந்தைகள் 'உலக குழந்தைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு மேம்பட்ட உலகை அமைப்போம்' என்ற பாடலைப் பிரதமர் இந்திராவுக்குப் பாடிக்காட்டினார்கள்.

இவர்கள் உலக குழந்தைகள் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளசெய்திப் பத்திரிகையொன்றின் முதல்பிரதியையும் இந்திராவிடம் கொடுத்தனர். கூடவே அணிசேரா இயக்கத் தலைவியாக தெரிவுசெய்யப்பட்டதற்கும் இக்குழந்தைகள் இந்திராவுக்கு வாழ்த்துத்தெரிவித்தனர்.

(கி)

ஆத்மீக உணர்வு அழிக்கமுடியாதது

- ஆர். எம். வீரப்பன்

சென்னை, மார்ச். 23

''ஆத்மீக உணர்வு அழிக்க முடியாததொன்று. ஆழ வேரூன்றிய அவ்வுணர்வு தொடர்ந்தும் வியாபித்து வருகிறது'' என்று தமிழக அறநிலை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் கூறினார்.

ஆலய மலர் ஒன்றின் வெளியீட்டு வைபவத்தில் பேசிய அமைச்சர் ''இந்தியாவில் ஆஸ்திகர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது'' என்றார்.

அமைச்சர்வீரப்பன் மேலும், தமிழகத்தின் பழம் பெரும் கோயில்களையும், சேதமுற்ற வணக்கஸ்தலங்களையும் திருத்துவதற்கென தமிழக அரசு நிதிஒதுக்கியுள்ளதென்றார். (கி)

''பிளவுசக்திகளுக்கு எதிராக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்!''

-- பிரதமர் இந்திராகாந்தி

புதுடில்லி மார்ச் 23

''பிளவு சக்திகளுக்கெதிராக மக்கள் அனைவரும் மிகவும் விழிப்புடனிருக்கவேண்டும். ஜாதி, மத, இனங்களின் பெயரைக் கொண்டு பிரிவினைவாதிகள் அரசியல் லாபம் தேட முயற்சிப்பர். ஆனால் மக்கள் இதற்கு ஒருபோதும் இடம்தரக்கூடாது.''

இவ்வாறு இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி மத்திய மாநில பொலிஸ் தலைவர்கள், பந்தோபஸ்து தலைவர்கள் கலந்து கொண்ட ஆண்டுவிழா நிகழ்ச்சியொன்றில் உரையாற்றினார்.

திருமதி இந்திரா காந்தி மேலும் கூறியதாவது:''நமது பிரச்னைகள் தீர்க்கப்பட்டு வெற்றியுடன் நாம் செல்லும்போதே சவால்களும் எம்முன் தோன்றுகின்றன. அச்சவால்களைக்கண்டு பின்வாங்கக்கூடாது. தொடர்ந்தும் நாம் எமது குறிக்கோளில் நம்பிக்கை வைத்து அவற்றை முறியடிக்கவேண்டும்.

அணிசேரா உச்சி மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்த பெருமையில் பாரதம் விளங்குகின்றது. இம் மகாநாட்டின் மூலம் அணிசேரா இயக்கம் மேலும் பலமடைந்துள்ளதை அறிய முடிகிறது'' என்றார். (கி)

தியாகி பகவத்சிங் நினைவு தினம் !

புதுடில்லி, மார்ச் 23

இந்திய சுதந்திர போராட்ட தியாகிகளான பகவத்சிங், ராஜகுரு, சுக்தேவ் ஆகியோரது 52வது நினைவுதினம் இந்தியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1931ம் ஆண்டு மார்ச் 23ந் திகதியிலேயே தியாகி பகவத்சிங், அவரது சகாக்களான ராஜகுரு, சுக்தேவ் ஆகியோருடன் சேர்த்து லாகூர் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார்.

இத் தியாகிகளின் நினைவு தினத்தை முன்னிட்டு பிரதமர் ஜனாதிபதி ஆகியோர் செய்திகளை அனுப்பியுள்ளனர். அவற்றில் இத்தேசாபிமானிகளின் தியாகமனப்பான்மை எதிர்காலச் சந்ததியினருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(கி)

இஸ்ரேலின்போக்குக்குறித்து

ஐ. பொ. ச. தலைவர்கள் கண்டனம்!

லண்டன் மார்ச் 23

ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் தலைவர்கள் இஸ்ரேலின் போக்கைக் கண்டித்துள்ளனர். இத்தலைவர்கள் கடந்த இரு தினங்களாக பிரஸ்ஸெல்ஸில் தமது உச்சி மகாநாடொன்றை நடத்தினர். அம்மகாநாட்டின் இறுதியிலேயே அவர்கள் இஸ்ரேலின் நடவடிக்கைகளைக் கண்டித்தனர்.

அவர்கள் மேலும் மேற்காசிய நிலை பற்றிக் கூறுகையில், இஸ்ரேலின் போக்கு கவலையளிப்பதாக இருக்கிறதென்றும் லெபனானில் சுமூகநிலை தோன்றும் வகையில் அங்கிருந்து சகல வெளிநாட்டுத்துருப்புகளும் வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தினர்.

ஜோர்தானின் மேற்குக் கரையில் இஸ்ரேலின் நடவடிக்கைகளையும் இத்தலைவர்கள் கண்டித்தனர். அத்துடன் மேற்காசிய சமாதானத்துக்கு இம்மேற்குக் கரைநிலை பெரும் இடையூறளிக்கிறதென்றும் இவர்கள் கூறினார்கள்.

இஸ்ரேல் நடத்தும் சமாதான நட்புறவுப் பேச்சுக்கள் மெய்யானவையாகவும், உறுதியானவையாகவும் இருக்க வேண்டுமென்று இவர்கள் தெரிவித்ததுடன் இப்பேச்சுவார்த்தைகளுக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஆதரவளிக்கவேண்டுமென்றனர்.

[கி]

வண்ணை சிவன் சப்பர, தேர் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை வைத்தீஸ்வர சிவன் ஆலயத்தில் நாளை 25ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு சப்பரத் திருவிழா நடைபெறும். மின்னொளியில், அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் சுவாமி வீதிவலம் வருவார். 27ம் திகதி ஞாயிறு தேர் உற்சவம் காலை 7 மணிக்கு நடைபெறும். ஐந்து தேர்கள் வீதிவலம் வரும்,

மணிவாக்கு

தான் முன் செய்த வினையின்மனிதன் தனக்குத் தானேபோட்டுக்கொண்ட முட்டுக்கட்டையானது இன்றுவிதி அல்லது ஊழ் என்ற பெயர் பெறுகிறது.
— அருள்விருந்து

நமது நோக்கு

கட்டுக்கடங்காக்காளைகள்?

எங்கள் நாட்டின் பல்கலைக் கழகங்களைப் பிடித்த பிசாசு என்ன?

எவ்வளவு காலமாக நாட்டின் பல்கலைக்கழகங்கள் ஒழுங்காக இயங்கமுடியாத நிலையில் இருக்கின்றன?

இதற்குப் பொறுப்பு யார்? இது இன்றுதான் பெருக்கெடுத்தவெள்ளமா?

இதன் பொறுப்பை ஒருவரிடமோ அல்லது ஒரு பகுதியிலோ சுமத்துவது தவறென்பது தெளிவு

பல்கலைக்கழக குழப்பங்கள் பல ஆண்டுகளாகத் தோன்றி மறைகின்றன. இவை தொடரும் சாத்தியம் உண்டு.

நிரந்தரமாக அவை மறைந்துவிடும் நிலை எப்போதுதான் வருமோ? சொல்ல முடியாத நிலை இன்று காணப்படுகிறது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் பிரச்னைகள் வெவ்வேறாக இருந்தபோதும், அவற்றிற்கு ஆதாரமாக உள்ள காரணங்கள் ஆராய்ந்து நீக்க நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் குழப்பங்கள் மீண்டும் தொடர இடமுண்டு. வெறும் பயமுறுத்தலும், தண்டனையும் நிலைமையைமோசமாக்கும்.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் வீடுவீடாக நடத்திய பரிசோதனையில் எழுந்த தொல்லைகளே அங்கு நிலவும் குழப்பத்துக்குகாரணமாக இருந்தது மாணவர்களின் சுயாதீனத்தைப் பறிக்கும் நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை.

ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கும் சுற்றுப் புறத்தில் வாழும் மக்களுக்கும் ஏற்பட்ட பிணக்கு நெருக்கடியை நீடித்திருக்கிறது.

கொழும்புப் பிரச்னை இலவசக் கல்விக் கொள்கைக்கு மாறாக வெளிவாரி சட்ட மாணவர்களுக்கு நடத்தப்படும் வகுப்புகளுக்கு பணம் அறவிடப்படுவதுபோன்ற குறைகள், மாணவர்வகுப்புகளை பகிஷ்கரிக்க, அதனால் ஏற்படக் கூடிய அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் வளாகத்துக்குள்ளே அழைக்கப்பட்டது சரியெனத் தோன்றவில்லை.

பல்கலைக்கழக அதிகாரிகள் மாணவ கோரிக்கைகளை ஆராய்ந்து சமாதானம் நிறுவ முயற்சியெடுத்தது மெய். ஆனால் அடிப்படை உண்மை ஒன்றை அவர்கள் தெரிந்துகொண்டே ஏளனம் செய்வது வேதனைக்குரியது. இன்றைய மாணவ சமூகம் சமூகவிரோதக்கும்பல் அல்ல.

பல்கலைக்கழக மாணவர்கள் நாட்டின் மாணவ சமூகத்தின் வடித்தெடுத்த பகுதி, விடயங்களைப் புரியும் ஆற்றல்; நீதி கோரும் நேர்மை உள்ளம். அநீதியைத் தாங்க முடியாத மதிநுட்பம்; புதுமையில் நாட்டம்;-இப்பண்புகள் ஒன்று கதிரண்ட கூட்டம் இது. சாமர்த்தியத்துடன் அணுக வேண்டிய எரி நெருப்பு.

கருத்து வேறுபாடுகள் தலைதூக்கினால், அதிகாரத்தை எதிர்க்கும் சுபாவமும், ஆற்றலும் அவர்களின் இயல்பு; இதனை உணராமல், அவர்கள் கட்டுக்கடங்காக் காளைகள் என்று மட்டம் தட்டி வருவது பெருந்தவறு.

இத்தகைய உள்ளம் படைத்த ஒரு சமூகம் நாட்டின் வருங்காலத்துக்கு மட்டுமல்ல, இன்றைய வளர்ச்சிக்கே இன்றியமையாதவர்கள்; பிழையான பாதையில் திசை திருப்பப் பட்டால் அதனைத் திருத்துவது யாருடைய கடமை?

பல்கலைக்கழகத்தில் படிப்பும், ஆராய்ச்சியும், கருத்துப் பரிமாறலும், ஒரு சிறப்பானமரபாகவேரூன்றிவிட்டால், காலத்துக்குக் காலம் 'கலாட்டா' காணப்பட்டாலும் அது கல்வி வளர்ச்சிக்கு பங்கம் விளைக்க மாட்டாது.

இந்த மரபுக்கு அவசியமானவை, தகைமைபெற்ற ஆசிரியர்கள்; துறைத் தலைவர்கள், அரசியல் தலையீட்டுக்கப்பாற்பட்ட உபவேந்தர்கள், இவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் மாணவ குழாம்; இவற்றை இந்நாட்டில் உற்பத்தி செய்தே ஆக வேண்டும்.

நாம் குறிப்பிடுவது என்றும் அசாத்தியமேயென்று கையை விரிக்கும் நிலை இன்று காணப்படுகின்றது.

மாணவர்களின் முறைப்பாடுகள் யாவும் பல்கலைக் கழக சமுதாயத்தால் ஆராயப்பட்டு அதிகாரிகளின் ஆசீர்வாதத்துடன் சுமுக முடிவெடுக்கக் கூடிய நிலை உருவாக வேண்டும்.

இதற்கு அத்தியாவசியமான நூல் நிலையம், மாணவ மன்றம், மாணவ-ஆசிரிய தொடர்பு போன்றவை நாளுக்கு நாள் வளர்ச்சியடைய வேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்களைச் சமாளிக்கும் அவலநிலை இன்றையது; அதற்கேற்ப நிர்வாகம் மாற்றியமைக்கப்படவேண்டும்; திறமையான ஆசிரியர்களைத் தேடுவது இன்றைய முக்கிய பிரச்னை.

அரசாங்கத்தின் ஏவலுக்குக் கட்டுப்பட்ட பல்கலைக்கழக மானிய சபை, குழப்பங்களை அடக்குமென்று எவரும் கனவு காண்பது மடமை; அதன் கடமையுமல்ல.

"பல்கலைக் கழகங்கள் திறந்திருக்கின்றன; பெற்றோர் மாணவர்களை வகுப்புகளுக்கு போகச் செய்யும் பொறுப்புடையவர்" என்ற எஸ். ஓ. எஸ். விடுப்பதானால் மாணவர்களின்இயல்பு சரியான விளக்கம் பெற்றிருக்கவில்லையென்பது தெளிவு.

மாணவ சமுதாயத்தை மதித்து, அவர்களின் பரபரப்பான உள்ளங்களை மட்டுப்படுத்தி நடத்தும் ஆற்றல் அற்ற அதிகாரிகள், தோல்வியுற்ற ஜப்பானிய படைத் தலைவர்களைப்போல், தங்கள் பதவிகளை விட்டு தங்கள் காலத்தை பாட்டு எழுதுவதிலும், அல்லது உருளைக்கிழங்கு உற்பத்தியிலும் கழித்தால் எவருக்கும் நட்டம் ஏற்படாது.

'நல்லைக்குருமணி நமக்குக் கிடைத்தது நம்தவப்பயனே'

2ம் ஆண்டு நிறைவுவிழாவில் செல்வி தங்கம்மா

(யாழ்ப்பாணம்)

"ஈழத்தமிழ்சைவமக்களுக்கு ஓர் ஆதீனம் இல்லை என்ற நிலையைப் போக்கி இங்குஓர் ஆதீனத்தை அமைத்து 16 ஆண்டுகளுக்குமேலாகத் தெய்வீகப்பணி ஆற்றியவர் சிவபரிபூரணமெய்திய ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகள். அருமையான தொண்டுகளைத் தொண்டையினால் செய்தவர் அவர். குருமணி நமக்குக் கிடைத்தது, நாம் செய்த மிகப் பெரும் தவப்பயனேயாகும்."

இவ்வாறு நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்தில் நிகழ்ந்த நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகள். இரண்டாவது ஆண்டு குருபூசைவைபவத்தில் கலந்துகொண்டு 'குருவின் திருமேனி காண்டம்' என்னும் பொருளில் சிறப்புரையாற்றுகையில்துர்க்கா துரந்தரி மேற்கண்டவாறு கூறினார்.

காலை 6 மணியிலிருந்து விசேஷ பூசை, சங்காபிஷேகம் முதலான கிரியைகளை சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் நடத்தினார். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தீபாராதனைகளைச் செய்தார். பிற்பகல் 4-30 மணியளவில் சுவாமிகளின் திருவுருவப்படம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் தலைமையில் பருத்தித்துறை வீதிவழியாக ஊர்வலமாக அடியார்கள் புடைசூழ எடுத்து வரப்பட்டுதொடர்ந்து பூசைகள் நடைபெற்றன.

இவ்வைபவத்தில் துர்க்கா துரந்தரி மேலும் உரைநிகழ்த்தும்போது.

"சுவாமிகள் ஒருமுறை வெள்ளவத்தைஇராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நிகழ்ந்த விரிவுரையின் போது திடீரென மயக்கமுற்று வீழ்ந்துவிட்டார். இதைக் கேள்வியுற்ற நான் வேறோர் இடத்திலிருந்து ஓடோடிச் சென்று பார்த்தபோது எந்த இடத்திலிருந்தும் இந்த உயிர் போனாலும் பரவாயில்லை. எனது இப்பணியினை விடமுடியாது சுவாமிகள் என்னிடம் கூறினார். அப்படியாக எவ்வேளையிலும் சுவாமியிடம் சிவசிந்தனையே குடிகொண்டிருந்தது. சிலர் தாம் கற்றதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாது மடிந்து போகின்றார்கள். அத்தகையவர்களால் இம்மண்ணுக்கு எத்தகைய நன்மையும் கிடைத்துவிடாது. ஆனால் சுவாமிகளோ தமது வாழ்நாளிலேயே இத்தகைய ஆதீனத்தை அமைத்து எமக்கெல்லாம் எது நல்வழி என்பதைக்காட்டிவிட்டுச் சென்றுள்ளார்" என்றார்.

இரண்டாண்டு நிறைவு நாள் வெளியீடாக 'பூசைக்குகந்த பூக்களும்' பாத்திரங்களும் என்ற கைநூலினை, துர்க்கா துரந்தரி வெளியிட்டு வைக்க அவரிடமிருந்து சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் முதற் பிரதியினைப்பெற்றார். இக்கைநூல் நல்லை ஆதீன வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. (அ)

"கல்விச்சேவை
ஆணைக்குழு தோன்றியது முதல் தமிழ்ப்பாடசாலைகள் பாழ்"

-- வவனியா எம். பி.

(வவுனியா)

வசதிக்கட்டண ஆசிரியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கவேண்டுமெனக்கை கல்வி அமைச்சருக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் வவனியாவில் தெரிவித்தார்.

வவனியா மாவட்டப் பாடசாலைக்கல்வி அபிவிருத்தி தொடர்பாக நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு. க. சீனிவாசகம் தலைமையில் இக்கூட்டம் நடந்தது.

வவனியா மாவட்டக்கிளை தமிழர் ஆசிரிய சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் திரு. மகாசிவம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது!

"எமது தாய்ச்சங்க வருடாந்த மகாநாட்டில் எமது கோரிக்கைகளில் ஒன்றாக வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு அரசு [நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று கல்வி அமைச்சை வலியுறுத்தியது. இதுதொடர்பாகப் பலசந்தர்ப்பங்களில் நியமனம்[வழங்கப்படுமெனஅரசு தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.] ஆனால் கல்விச் சேவை ஆணைக்குழு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவுமே மேற்கொள்வதாக தெரியவில்லை.

"ஜனாதிபதி கூட சர்வஜன வாக்கெடுப்புத் தேர்தல் பிரசாரத்துக்கு வடபகுதிக்கு வந்தபோது வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படுமென உறுதியளித்திருந்தார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

"தமிழ்ப் பகுதிகளில் ஆசிரியர் இடமாற்றம் ஒழுங்கீனமாகநடக்கின்றது. இதனால் தமிழ்ப் பாடசாலைகள் பாழாகும் நிலை ஏற்பட்டுள்ளது"

ஆசிரியர் பற்றுக்குறை மிக மோசம்

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் இங்கு பேசுகையில் தெரிவித்ததாவது!

"வவனியாவில் பாடசாலைக் கட்டிடங்கள் இருந்தபோதிலும் ஆசிரிகர் பற்றுக்குறை மிக மோசமாகவுள்ளது.

402 ஆசிரியர்கள் இங்கு பற்றுக்குறையாக உள்ளது. 40 பாடசாலைகள் ஒரே ஆசிரியருடன் இயங்குகின்றன. 6 பாடசாலைகள் ஆசிரியர் இல்லாது மூடப்பட்டுள்ளன.

இந்த வருடம் இங்கு மாற்றலாகி வந்த 61 ஆசிரியர்களில் 21 ஆசிரியர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வேறு பகுதிகளுக்கு மாற்றலாகிச்சென்றுவிட்டனர்.

கல்விச் சேவை ஆணைக்குழு எப்போது உருவாகியதோ அன்று முதல் தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகள் பாழடிக்கப்படுகின்றன.

வவனியாப் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. சி. பொ. சிவபாதம் வவனியாக் கல்வி வட்டார இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவரும் வவனியா மாவட்டப் பிரசாரச் செயலாளருமான திரு. கே. சிவஞானம், நிர்வாகச்செயலாளர் திரு. அருணகிரிராஜா உட்பட இங்குள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வவனியாக் கிளைச் சங்கச் செயலாளர் திரு. மு. கார்த்திகேசன் நன்றிதெரிவித்துப் பேசினார். (அ)

தவக்கால நற்சிந்தனை

துன்பத்தின் முடிவில் இன்பமிருக்கும்

"உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் [சொல்கிறேன். நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், நீங்கள் துன்புறுவீர்கள். ஆனால் உங்கள் துன்பம் இன்பமாக மாறும். குழந்தை பிறக்கும் போது தாயானவள் தனக்கு பேறுகாலம் வந்துவிட்டதால் துன்புறுகிறாள். குழந்தையைப் பெற்றெடுத்த பின்போ உலகில் மனிதன் ஒருவன் தோன்றினான் என்ற மகிழ்ச்சியால் தன் வேதனையை மறந்து விடுகிறாள். இதுபோல இப்பொழுது நீங்களும் துன்புறுகிறீர்கள். ஆனால் உங்கள் உள்ளம் மகிழ்வுறும். அப்போ உங்கள் மகிழ்ச்சியை உங்களிடமிருந்து எவனும் பறித்துவிடமாட்டான்" இந்த உமது வார்த்தைகளின் பொருளை உணர்ந்து விட்டோம். அந்த நாளைஎதிர்நோக்கி உள்ளோம்.

அருட்செல்வன் ம. ரூபன்

வியாகுல அன்னை விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தின் 6ம் கிழமை வியாகுல அன்னைவிழா நாளை 25ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது.

அன்று மாலை திருப்பாடு ஆசந்தி ஆலய பெரிய வாயிலிலிருந்து புறப்பட்டு ஆஸ்பத்திரி வீதி 3ம் குறுக்குத்தெரு அரசடி வீதிவழியாக கல்வாரி கெபிக்கு எடுத்துச்செல்லப்படும். (ப)

தமிழக எழுத்தாளர் இன்றைய நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல எழுத்தாளர்களான பேராசிரியர் இராமகிருஷ்ணன், சிதம்பர ரகுநாதன், திருமதி ராஜம் கிருஷ்ணன் முதலியோர் இன்று மாலை 4 மணிக்கு யாழ்

[8ம் பக்கம் பார்க்க]

ஆயுதபடைகளால் மேற்கொள்ளப்படும்

அரசியல் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த உலகளாவிய இயக்கம்

சர்வதேச மன்னிப்புச் சபை ஏற்பாடு

[கொழும்பு]

1980 ஆம் ஆண்டு முதல் 20க்கும் அதிகமான நாடுகளில் அரசாங்கப் படைகளினால் புரியப்படும் சட்டவிரோதமான அரசியற் படுகொலைகளுக்கு அல்லது உத்தியோகபூர்வமாக ஒப்புதலளிக்கப்பட்ட மரணப்படை அணிகளுக்கு விரிவான சான்று தன்னிடம் இருப்பதாக சர்வதேச சமாதானதாபனம் அறிவித்துள்ளது.

இத்தகைய படுகொலைகளை வெளிப்படுத்தி, அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு பொது அபிப்பிராயத்தைத் திரட்டுவதற்கான இயக்கமொன்றினைத் தொடக்கிவைத்த இத்தாபனம், ஒன்றுக்கொன்று நெடுந்தூரத்துக்கு அப்பாலுள்ள பிலிப்பைன்ஸ், சிரியா, எல்சல்வடோர் போன்ற நாடுகளிலிருந்து துலக்கமான உதாரணங்களை எடுத்துக்காட்டியுள்ளது!

''கடந்த பத்தாண்டுகளில் ஆயிரமாயிரம் மக்கள் தங்கள் நாடுகளில் அரசியல் அதிகாரிகளால் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.'' சர்வதேச மன்னிப்புத்தாபனம் தனது இயக்கத்தை ஆரம்பிப்பதற்கென அரசாங்கங்களினால் புரியப்படும் அரசியற் கொலைகள் என்ற தலையங்கத்துடன் வெளியிட்டுள்ள 131 பக்கங்கள் கொண்ட புதிய அறிக்கையொன்றில் இவ்வாறு கூறப்படுகிறது.

இச்சம்பவங்கள் அனைத்திலும், பலியானவர்களுக்கு சட்டத்தின் பாதுகாப்பு மறுக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் அவர்கள் கடைப்பிடிக்கின்றதாக சந்தேகிக்கப்பட்ட கோட்பாடுகளின் அல்லது நடவடிக்கைகளின் அல்லது மரபினத்தின் காரணமாகவே கொல்லப்பட்டுள்ளனர். 1970 ஆம் ஆண்டுக்குப் பிந்திய காலப்பகுதிகளில் உகண்டாவிலும், கம்பூசியாவிலும் வகைசொல்லப் பொறுப்பென்பதே இல்லாமல் ஆயிரக்கணக்கானோர் கொன்று குவிக்கப்பட்டதையும், அண்மைக் காலங்களில் வேறு நாடுகளில் மக்கள் கூட்டங்கூட்டமாக தீர்த்துக்கட்டப்படுவதையும், படுகொலை செய்யப்படுவதையும், இச்சம்பவங்கள் உத்தியோகபூர்வமாக மூடிமறைக்கப்படுவதையும் பற்றி இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது

சில விடயங்களில், அரசியற் சந்தேகநபர்கள் உத்தியோகபூர்வமான சிறைக்காவலில் எடுத்துச் செல்லப்படுகின்றனர்; பின்னர் அவர்கள் 'ஆயுதந்தாங்கிய கலவரங்களில்' கொல்லப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது. வேறு சந்தர்ப்பங்களில் படையணிகள், மக்களை வன்முறையாகக் கொன்று குவித்தவண்ணம் சுற்றுப்புறங்களை அலலது கிராமங்களை ஊடறுத்துச் செல்கின்றன. மேலும் சில சந்தர்ப்பங்களில் சாதாரண உடையணிந்த இராணுவத்தினர் சந்தேக நபர்களை அவர்களது இல்லங்களிலிருந்து அல்லது தொழிலிடங்களிலிருந்து கைப்பற்றிச் செல்கின்றனர்.

சர்வதேச மன்னிப்புத் தாபனம் சுட்டிக்காட்டுவது திட்டமிட்டுச் செய்யப்படும் கொலைகளையே– சித்திரவதையின் கீழ் முதலாய், தற்செயலாக, அல்லது அரசாங்கக் கொள்கையை மீறுகின்றவிடத்து. அல்லது நீதிமன்றத்தால் தீர்ப்பிடப்பட்ட மரணதண்டனைகளில் அல்லது எதிர்த்தாக்குதலின் போது ஆட்கள் கொல்லப்படுவதை அல்ல. (இவை அனைத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே இவ்வியக்க செயலாற்றுகின்ற போதிலும்) என்பதனை வலியுறுத்துகின்றது.

''ஒரு சிலர் சிலவேளைகளில் ஊகிப்பதுபோல அரசாங்கங்களினால் புரியப்படும் அரசியற் படுகொலைகள் அதிகரிக்கின்றன என்பதனை தற்போதுள்ள சான்றுகளில் காண்பதற்கில்லை. எம்மிடமிருப்பது கொலைகளைப் பற்றியதும் இவற்றை பொதுமக்கள் நன்கறிந்து வைத்திருப்பதைப் பற்றியதுமான தகவல்களேயாகும். உலக அபிப்பிராயத்தின் தூண்டுகோலால் நியாயமான விசாரணையோ, சடுதிமரணத்துக்குப் பதிலாக விடுதலையோ கிடைக்கும் என்ற நம்பிக்கையை சிறைக்கைதிகளுக்கு அளிக்கமுடியும்.'' இவ்வியக்கத்தின் பிரதிநிதியொருவர் இவ்வாறு கூறுகின்றார்.

இப்படியான ஒரு தூண்டுகோலை அதிகரிப்பதுதான் சர்வதேச மன்னிப்புத் தாபனத்தினுடைய இப்புதிய இயக்கத்தின் குறிக்கோளாகும். இத்தாபனம் 150க்கு மேற்பட்ட நாடுகளில் 350,000க்கும். அதிகமாக உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இத்தகைய பல உறுப்பினர்களும் பிரசார இயக்கங்களிலும் விழிப்பு நிலைகளிலும் ஆர்ப்பாட்டங்களிலும் வேண்டுகோள்களிலும் பங்குபற்றுவர். இத்தகைய நடவடிக்கைகளின் நோக்கம், கொலைகள் எந்த நாடுகளில் இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகின்றதோ அந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கும்' மேலும் மேலும் கொலைகள் இடம்பெறுவதை தடுத்து நிறுத்துவதற்கு அவற்றின் செல்வாக்கைப் பயன்படுத்துமாறு வேறு அரசாங்கங்களுக்கும் வேண்டுகோள் விடுப்பதாகும்,

---

உள்ளூர்எழுத்தாளர்களுக்கு

மன்னார் அபிவிருத்திசபை ஊக்குவிப்பு

[மன்னார்]

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் 'கலைவாதி கலீல்' எழுதிய 'ஒரு வெள்ளி ரூபாய்' என்ற சிறுகதைத் தொகுதியின் ஐம்பது பிரதிகளை மன்னார் அபிவிருத்தி சபை வாங்கியுள்ளது.

உள்ளூர் வழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக அமுல்படுத்தப்படும் இந்த திட்டத்தின் அடிப்படையில் கலைவாதி கலீல் எழுதிய நூலே முதலில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மன்னாரிலுள்ள நூலகங்கள் மற்றும் உயர்தர வகுப்புகள் உள்ள கல்லூரிகள் ஆகியவற்றுக்கு இந்நூலின் பிரதிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதனையிட்டு மன்னார் அபிவிருத்திசபைத்தலைவர் திரு. பி. எம். செபமாலையை மன்னார் வாசகர் அபிவிருத்தி வட்டம் பாராட்டியுள்ளது.

'குருமனையில் டால்ரின் ஏஜமானிபோல இயங்கினார்'

போதகர் மகள் தொடர்ந்து சாட்சியம்

(கொழும்பு)

குருமனையில் நடந்த 1978-ம் ஆண்டு கிறிஸ்மஸ் மதிய விருந்தைத் தயாரிப்பதில் டால்றின் இங்ரம் எஜமானி போலச் செயல்பட்டார்'

குருமனை இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியமளித்த 1-ம் எதிரியான வண மத்யூ பீரிஸின் 2-வது மகள் மல்ராணி தொடரான குறுக்குவிசாரணையின் போது தெரிவித்தார்.

இவ்வழக்கில் வண. மத்யூ பீரிஸ், திருமதி டால்ரின் இங்ரம் ஆகிய இருவரும் சேர்ந்து திருமதி பீரிஸ் இங்ரம் ஆகிய இருவரையும் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிதரப்புச் சட்டத்தரணி ஆர். ஐ ஒபயசேகராவின் கேள்வியொன்றுக்கு மல்ராணி பதிலளிக்கையில், 'இங்கிலாந்தில் எனது தாயார் என்னுடைய சகோதரி மிஹிரி இல்லத்தில் இருந்தபோது, அனேகமாகத் தினசரி சென்று அவரைப்பார்ப்பேன்' என்று கூறினார்.

திருமதி மல்ராணியிடம் கடிதம் ஒன்று காண்பிக்கப்பட்டது. இங்கிலாந்திலிருந்து தாயார் திருமதி பீரிஸ் தனது கணவர் வண. மத்யூ பீரிஸுக்கு எழுதிய இக்கடிதம் கோர்ட்டில் வாசிக்கப் பட்டது. 1978 அக்டோபர் 15-ம் திகதி எழுதப்பட்ட இக்கடிதத்தில், 'நான் மிகவும் குழம்பியிருக்கிறேன். மிஹிரி பேசும்போது சண்டை பிடிக்கும் போதும், காலை நிலத்திலடித்துக் கத்துவாள். அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. கூரைமுகடு கீழே விழும் விதத்தில், கதிரையை விட்டு எழும்பிக் கத்துவாள், எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. நான் இவ்வித கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிரி தரப்புச்சட்டத்தரணி ஒபயசேகரா: உனது தாயாருடன் இருக்கவில்லை. அவரைச் சென்று பார்த்து வந்திருக்கிறீர். உனது தாயார் அங்கு உன் சகோதரியின் துன்புறுத்தல் பற்றிச் உன்னிடம் சொல்லியிருந்தாரா?

மல்ராணி: அது துன்புறுத்தல் இல்லை!

கேள்வியொன்றுக்கு மல்ராணி பதிலளிக்கையில், 'எனது சகோதரி திடீரென ஆத்திரப் படுவார், அடுத்த வினாடி அவர் சாந்தமாகி விடுவார். எனது சகோதரி மிகவும் அன்பானவர்' என்றார்.

'எனது தாயாரால் நித்திரை கொள்ள முடியவில்லை. அக்கா சத்தம் போட்டார், அம்மாவிடம் அக்கா சொன்னார்: 'நித்திரை கொள்ள முடியாவிட்டால், டாக்டரிடம் போய்க் காட்டு' என்று கத்தினார்' என்ற இந்தக் கடிதத்தை எழுதினீரா என்று மல்ராணியிடம் சட்டத்தரணி கேட்டார்.

'ஆம், எழுதினேன், ஆனால் எட்டுமாதம் அவர் தங்கியிருந்த முழுக்காலத்திலும் இப்படித் தாயார் இருந்தார் என்று நான் குறிப்பிடவில்லை' என்று சாட்சி கூறினார்

'தேவதைகளில் உமக்கு நம்பிக்கை உண்டா? என்று எதிரிதரப்புச் சட்டத்தரணி கேட்டதற்கு, 'நான் நம்பவும் இல்லை, அவநம்பிக்கையும் இல்லை கூறினார்:

[விசாரணை தொடர்ந்து நடக்கிறது.]

ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.

6-01 சிறுவர்களுக்கான இசை நிகழ்ச்சி (சிங்களம்).

6-15 'கார்ட்டூன்' திரைப்படம் (ஆங்கிலம்).

6-30 இளைஞர்கள் விவகாரம் சம்பந்தமான தொடர் நிகழ்ச்சி.

7-00 செய்திமஞ்சரி [தமிழ்).

7-14 நாளைய நிகழ்ச்சிகள்.

7-15 'கிறீன் ஹோர்நெற்' (தொடர் நவீனம்—ஆங்கிலம்)

7-45 நடப்பு விவகாரங்கள் சம்பந்தமான அறிக்கை'

8-15 செய்தி மஞ்சரி (சிங்களம்).

8-29 நாளைய நிகழ்ச்சிகள்.

8-30 சிங்களப் படம்.

9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்).

9-45 சிங்களப் படம் தொடர்ச்சி,

10-30 ஒளிபரப்பு முடிவு.

மன்னார் செய்திகள்

[நமது நிருபர்]

மிளகாய் கொள்முதல் செய்வதற்கென வானில் வந்திருந்த கோஷ்டி ஒன்று கொள்முதல் செய்து மிளகாய்க்குப் பணம் கொடுக்காமல் மிளகாயுடன் தலைமறைவாகியது!

மாந்தைப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:

வான் ஒன்றில் வந்திருந்த 10பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று எஸ். முத்துநாடார் என்பவரிடம் 13,671 ரூபா பெறுமதியான மிளகாயைக் கொள்முதல் செய்து அதற்குரிய பணத்தைக் கொடுக்காது வானில் ஏறி மிளகாயுடன் தலைமறைவாகி விட்டனர்.

இக்கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் மட்டும் தப்பியோட முடியாது முத்துநாடாரிடம் அகப்பட்டார்.

இச்சம்பவம்பற்றி மன்னார்ப் பொலிசில் புகார் செய்யப்பட்டதுடன் முத்துநாடாரிடம் அகப்பட்டவரும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இம்முயற்சியில் ஈடுபட்டவர்கள் மருதங்கடவெலயைச் சேர்ந்தவர்கள் என பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நியமனம்

மன்னார் வாடகைக் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவராகச் சட்டத்தரணி புதுமைநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும்சில மகளிர் குழுக்கள்

மன்னார் மாவட்டத்திலுள்ள மேலும் சில ப. நோ. கூ. சங்கங்களில் கூட்டுறவு மகளிர் குழுக்களை ஆரம்பித்து இக்குழுக்களுக்கான கருத்தரங்குகளும் நடத்தப்படும்.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சிறீலங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் மன்னார்க்கிளைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கால்நடைகள் குடியிருப்பு

மன்னார் – தோட்டவெளியிலுள்ள கடல் தொழில் அமைச்சுக்குச் சொந்தமான வீடுகளில் யாரும் வசிக்காததால் பாழடைந்து காணப்படுகின்றன.

இவ்வீடுகளில் கட்டாக்காலி கால்நடைகளே தங்கிவருகின்றன

இவ்வீடுகளை மன்னார்மாவட்ட அபிவிருத்திசபை பொறுப்பெடுத்து கால நிலை அவதானநிலையத்திற்கு வழங்குவென ஒரு வருடத்திற்கு முன் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இதுவரை இத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை.

தபால் ஊழியர் பற்றுக்குறையை நீக்குக

மன்னார் பகுதி தபால் நிலையங்களில் நிலையங்களில் நிலவி வரும் ஊழியர்கள் பற்றுக்குறையை நிர்த்தி செய்வதற்கான நடவடிக்கை உடன்மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருவதென தபால் தொலைதொடர்பு சேவையாளர் சங்கத்தின் மன்னார்க்கிளையின் 30வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் மன்னார் அஞ்சல் பணிமனையில் திரு. பி. எஸ். கொன்ஸ்டன்டைன் தலைமையில் நடைபெற்றது.

இவர்களுக்கு தலைமன்னாரிலேயே டிக்கட்வழங்குக

கப்பல் மார்க்கமாகஇந்தியாவுக்குச் சென்றுவரும் தலைமன்னார்ப்பகுதி பிரயாணிகளுக்குத் தலைமன்னார் துறைமுகத்திலேயே டிக்கட்வழங்கப்பட வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினைத் தலைமன்னார் இளைஞர் விளையாட்டுக்கழகம் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமதுவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

யாழ். நகரில் மார்க்ஸ் நூற்றாண்டு தினம்

(யாழ்ப்பாணம்)

கார்ல்மார்க்ஸ் நூற்றாண்டு தினப் பொதுக்கூட்டம் இம்மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை யாழ், மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திரு. எம். ஏ. சி. இக்பால் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலாளர் திரு என். சண்முகதாசன் பிரதம பேச்சாளராகக்] கலந்துகொள்வார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கமிட்டி இக் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது. (அ)

மல்லாகம் கிராம அபிவிருத்திக்கு ‘நொருட்’ தாராள உதவி!

பிரதிநிதிகள் நேரில் விஜயம்

(மாவிட்டபுரம்)

மல்லாகம் கிராமத்தின் அபிவிருத்திக்காக மேலும் பல உதவிகளை அளிக்க 'நொருட்' தாபனம் முன்வந்துள்ளது.

மேற்படி ஸ்தாபனத்தின் சார்பில் திரு. ரூரே எல்லிக், திருமதி எலிசபெத் ஆகிய இருவரும் மல்லாகம் கிராம அபிருத்திச்சங்க அழைப்பின் பேரில் மல்லாகம் கிராமத்திற்கு விஜயம்செய்தனர்.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திற்கு இவர்கள் விஜயம்செய்தபோது, அங்குமாணவர்கள் குடிநீர் வசதியின்றி கஷ்டப்படுவது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் திரு. ச. வேலாயுதபிள்ளை இதற்கு உதவிசெய்யுமாறும்கோரினர். மேற்படி பிரதிநிதிகள் குடிநீர் வசதியை ஏற்படுத்த உதவி செய்வதாகக் கூறினர்.

மல்லாகம் பனம்பொருள் அபிவிருத்தி சங்கத்திற்கும் அவர்கள் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

தொழிலாளர்கள் இறக்கும் கள்ளில் ஒரு பகுதி பழுதடைந்து கீழே ஊற்றப்படுவதால் அதனை போத்தலில் அடைத்து விற்பதற்கு 4 லட்சம் ரூபா செலவில் தொழிற்சாலை அமைக்கப்படவேண்டியுள்ளதென அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மல்லாகம் இக் கிராமபகுதியில் 34 வீடுகளை அமைப்பதற்காக போடப்பட்டுள்ள அத்திவாரத்தையும் பிரதிநிதிகள் பார்வையிட்டனர். இந்த வீட்டுத் திட்டத்திற்கு மேற்படி ஸ்தாபனம் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கிக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கம் சுவீகரித்துள்ள 50 பரப்புக் காணியில் விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம், உடற்பயிற்சி செய்வதற்கான இடம் ஆகியவற்றை அமைப்பது பற்றியும் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் அவர்கள்சென்று பார்வையிட்டனர்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் மற்றும் சங்க பிரமுகர்கள், மாதர்சங்கத்தினர் ஆகியோர் இந்த பிரதிநிதிகளின் விஜயத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கம் தேநீர் விருந்தொன்றையும் அவர்களுக்கு அளித்தது.

‘கிராமியமட்டத்தில் அறிவுப்புரட்சி ஏற்படவேண்டும்’

(புங்குடுதீவு)

''கிராமியமட்டத்திலே அறிவுப் புரட்சி ஏற்பட்டால்தான் கிராமங்கள் முன்னேறமுடியும். வெளிநாடு போகும் மோகத்தையும் வியாபாரக் கடைகள் திறக்கும் நோக்கத்தையும் விட்டு; படித்துப் பட்டம்பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் சேவையாற்ற வேண்டுமென்ற விருப்போடு மாணவர்கள் கல்விபயில வேண்டும்''.

புங்குடுதீவு சித்திவிநாயகர் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக விவகாரங்களில் அரசு நடந்துகொள்ளும் முறையினை தேசிய மாணவர் சங்க [யாழ் கிளை] தீர்மானம் ஒன்றின் மூலம் கண்டித்துள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் கைது செய்யப்பட்டமை, ஜெயவர்த்தனபுர, கொழும்பு மாணவர்களின் கடன், புலமைப்பரிசில் நிறுத்தம் போன்ற அரச அடக்குமுறைகளை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று செயலாளர் திரு. அமிர்தராஜ் அத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்.

''ரோட்டரிக் கழகத்தின் உலகளாவிய சேவை''

பிரதம கல்வி அதிகாரி மன்சூர் பாராட்டு

(மானிப்பாய்)

''ரோட்டறிக் கழகம் உலகளாவிய சேவைசெய்கிறது. யாழ்ப்பாணத்திலும் ரோட்டறிக் கழகம் கணிசமான அளவு சேவைசெய்து வருகின்றது'' என்று யாழ். பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில், கோப்பாய் வட்டாரக்கல்வி வள நிலையமும், யாழ் ரோட்டறிக் கழகமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ சேவையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கோப்பாய் ''கல்விவள நிலையம் இத்தகைய சேவை செய்வதையிட்டு கல்வித்திணைக்களம் பெருமைப்படுகின்றது'' எனக் கூறினார்.

இலவச வைத்திய சேவை, வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரை நிகழ்த்திய கோப்பாய் கல்வி நிலையப்பொறுப்பதிகாரி திரு. எஸ். கி. எஸ். சிதம்பரநாதன் தமது உரையில் ''மாணவர்களின் கல்வித்தரம் உயர்வதற்குஅவர்களது தேகஆரோக்கியம் பேணப்படவேண்டியது அத்தியாவசியமாகும். நோயற்ற வாழ்வேகுறைவற்ற கல்வியைக் கொடுக்கும் யாழ். றொட்டறிக் கழகம் இத்தகைய சேவையைச் செய்யமுன்வந்தது போற்றுதற்குரியதாகும்'' எனக்கூறினார்.

யாழ். றொட்டறிக் கழகத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். சேனாதிராசா தமது உரையில் ''யாழ். றொட்டறிக் கழகம் குடாநாட்டின் பல பகுதிகளில் மருத்துவ சேவையை வழங்கியிருக்கிறது. கோப்பாய் கல்வி வள நிலையத்தினூடாக மாணவர்களுக்கும், வசதிகுறைந்த பெற்றோருக்கும் சேவைஅளிக்க இன்று எமக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. மக்களுக்குச் சேவைசெய்வதையே றொட்டறிக் கழகம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது'' எனக் கூறினார்.

இம்மருத்துவ சேவையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும், பெற்றோரும் பயன்பெற்றனர். பல்வைத்திய நிபுணர் டாக்டர் பி. எஸ். பாரதியிடம் காட்டுவதற்கு ஏராளமானோர் வந்திருந்தனர். அவர்களில் 130 பேருக்கு பல் பிடுங்கப்பட்டது. டாக்டர் எஸ். எஸ். சேனாதிராசாவிடம் சென்ற நோயாளருள் நால்வருக்கு இருதயத்தில் துவாரம் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டது, குழந்தை வைத்தியத்தோடு கண் நோயாளரையும் கவனித்த டாக்டர் எஸ். சண்முகலிங்கம் தன்னிடம் வந்த நோயாளருள் 15 பேரை கண் வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி கண்ணுத்துரைக்கு சிபாரிசுசெய்துள்ளார், இவர்களை டாக்டர் திருமதி கண்ணுத்துரைக்குக் காட்டுவதற்கு றொட்டறிக் கழக முன்னாள் தலைவர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஒழுங்கு செய்துள்ளார். காது, தொண்டை, மூக்கு வைத்திய நிபுணர் டாக்டர் வி. ஞானானந்தனினால் பரிசோதிக்கப்பட்ட நோயாளரில் கடும் நோயாளரை தமது மருத்துவ சேவைக்குபெரியாஸ்பத்திரிக்கு அழைத்துள்ளார். தொற்று நோய் வைத்தியநிபுணர் டாக்டர் சி.விஜயராஜாவும் சேவை அளித்தார். றொட்டறிக்கழகச் செயலாளர் திரு. எம். செல்வநாதனும் அன்றைய சேவையில் ஈடுபட்டிருந்தார். நோயாளருக்கு அத்தியாவசிய மருந்துகள் சில கொடுக்கப்பட்டன. வசதிகுறைந்தோருக்கு மருந்துகளை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கும் றொட்டறிக் கழகம் ஒழுங்குசெய்துள்ளது. காலை முதல் மாலைவரை இவ் இலவசசேவை நடைபெற்றது.

''கிளிநொச்சியில்மேலும் இரு கொத்தணி அமைப்புக்கள் தேவை''

-- ஆனந்தசங்கரி எம். பி.

[கிளிநொச்சி]

''கிளிநொச்சியில் பரீட்சார்த்தமாக உருவாக்கப்பட்ட கொத்தணிப்பாடசாலை முறை பெரு வெற்றியை அளித்து வருகிறது. இதனால் தான் இத்தொகுதியில் மேலும் இரு கொத்தணிமுறைகளை உருவாக்குமாறு கோருகிறேன்.''

இவ்வாறு கிளிநொச்சி கொத்தணிப்பாடசாலைகளின் முன்னோடித்திட்டமான இல்ல மெய்வல்லுநர் போட்டியின் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் இவ் அமைப்பில் உள்ள கிளிநொச்சிக்கனிஷ்ட மகாவித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலை, மகாவித்தியாலயம்கனகபுரம் பாடசாலை, சிங்கள மகாவித்தியாலயம், பன்னங்கண்டி இந்து பாடசாலை, திருவையாறு பாடசாலை சென் திரேசா மகளிர் மகாவித்தியாலயம் ஆகிய எட்டுப்பாடசாலைகள் பங்குபற்றின.

தமிழ்ப்பகுதியில் முதல் தடவையாக பரீட்சார்த்தமாக நடைபெற்ற இப்போட்டிக்குக் கொத்தணி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி தலைமைவகித்தார்.

போட்டி ஆரம்பத்தில் மகளிர் கல்லூரி மாணவிகளின் பாண்ட்வாத்திய இசையுடன் அணிவகுப்பு இடம்பெற்றது. தொடர்ந்து ஒலிம்பிக்தீபம் ஏற்றப்பட்டு மாணவர்தலைவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கொத்தணிச்செயலாளரும் அதிபருமான திரு. ஏ. கே. இராசேந்திரத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து பரிசளிப்பு விழாநடைபெற்றது.

இதில் உதவி அரசாங்க அதிபர் கே. சுப்பிரமணியம், சமூகசேவையாளர் திரு இ. கிருஷ்ணராசா ஆகியோர்சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி இவ்வைபவத்தில் மேலும்பேசுகையில் கூறியதாவது:

''கொத்தணி அமைப்பில் உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் இன்று மாறுபட்ட புதிய சூழ்நிலையில் சந்திக்கின்றனர். ஐயாயிரம் மாணவர்களுக்குமேல் ஒன்றுசேர்ந்து நண்பர்களாக இணைந்துள்ளனர். இதுகொத்தணி அமைப்பினாலே உருவாகியது இதையிட்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடையவேண்டும்.

''கொத்தணி அமைப்பில் எனக்குப்பூரண நம்பிக்கை உண்டு. எனவேதான் கிளிநொச்சியில் மேலும்இரு கொத்தணிகளை உருவாக்குமாறு கோருகிறேன். கல்வியில் எனதுதொகுதி முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்கில் கடந்த ஆண்டும் 15 லட்சம் ரூபாவும் இவ்வாண்டு 16 லட்சம் ரூபாவும் ஒதுக்கினேன். கல்வி அபிவிருத்தி கண்டால் தொகுதியும்அபிவிருத்தியடையும்.''

கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை பேசுகையில் இன்றைய விளையாட்டுப் போட்டி நகர்ப்புறக்கல்லூரிகளிலும் பார்க்கச்சிறப்பாக இருந்தது என்றும், கல்வியில் கிராமப்புற நகர்ப்புற வேறுபாடுநீங்கவேண்டும் என்றும், கிளிநொச்சியில் கொத்தணி முறை வெற்றியளித்துள்ளது என்றும், இங்கு மேலும் இரு கொத்தணிப்பாடசாலை அமைப்புத்தேவை என அவர் கோருகிறார் என்றும், இங்கு மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் கொத்தணிமுறை அமையவேண்டும் என்றும் ஆனால் திரு. ஆனந்தசங்கரி எம்.பியைப்போல ஏனைய எம். பிக்களும் இதற்கு ஒத்துழைப்புத்தருவார்களா என்பது சந்தேகம் என்றும் சொன்னார்.

இப்போட்டிகளுக்குச் செயலாளர்களாக விளையாட்டுத்துறை ஆசிரியர்கள் எம். எச். எம். மிலான், திருமதி எஸ். ரி சூரியமூர்த்தி, சந்திரசேன கொடித்துவக்கு ஆகியோர் செயற்பட்டு கல்வி அதிகாரிகளினதும் எம். பி. யினதும் பாராட்டுக்களைப் பெற்றனர்.

ஜனாப் எம்.எச். எம்.மிலான் நன்றி தெரிவித்துப் பேசினார்.

[அ]

நூல் மதிப்புரை

நூல்: நிழலின் பின்னே மனிதன்.

ஆசிரியர்: நா. முத்தையா.

வெளியீடு: ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி.

விலை: 10 ரூபா.

நாவல்-சிறுகதை போன்று தொனிக்கும் பெயரைக் கொண்டுள்ள இந்நூல் ஒரு சமயக் கட்டுரை நூலாகும்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள திருமுருக கிருபானந்தவாரியார் 'கட்டுரை விறுவிறுப்பாகவும் உணர்ச்சியூட்டும் நடையுடனும் நன்கு சொல்நடை பொருள்நடை பொலிய விளங்குகின்றது' என குறிப்பிட்டுள்ளார்.

இருபத்திரண்டு உபபிரிவுகளைக் கொண்ட ஒரே கட்டுரையாகவே இந்நூல் உள்ளது. அழகான முன் அட்டைப் படத்துடனும், 62 பக்கங்களுடனும் விளங்கும் இந்நூல் சிறுவர்களும் முதியோர்களும் எளிதாகப் படித்துப் பயன்பெறத்தக்க விதத்தில் தெளிவான எழுத்துக்களால் அச்சிடப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கது.

மனப்பாங்கிற்கும், வாழ்க்கை முறைக்கும் சம்பந்தமில்லாத முறையில் சில சமய உண்மைகளைத் திணிப்பது என்றில்லாமல் உயிரின் இயல்பையும், மனமானது அன்பு முதலிய பண்புகளால் விசாலிக்க வேண்டியதன் அவசியத்தையும் வஞ்சம்-பெருமை முதலிய சிறுமைகள் நீங்கி அறமும் அன்பும் மிகுந்த மனத்தின் அழகினையும் நூலாசிரியர் தனக்கே உரிய தெளிவான முறையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ராஜாஜி-கபீர்தாஸ் முதலிய பெருமக்களின் வாக்குக்களையும் எழுத்துக்களையும் மேற்கோளாகக் காட்டி அரிய-அவசியமான பல உண்மைகள் தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றன.

கி. மு. 65-ம் ஆண்டு லூக்ரீஷெஸ் என்ற ரோமானிய கவிஞரும் 1825-ம் ஆண்டில் டாக்டர் பிட்டன் என்னும் ஆங்கிலேயரும் கண்ணின் இயல்புகளைப் பற்றிச் செய்த ஆராய்ச்சி முடிவுகளை மேற்கோளாகக் காட்டித் தியானத்தின் தன்மைகள் முறைகளைப் பற்றி விளக்கியுள்ளது மட்டுமன்றி மேற்குறிப்பிட்ட விஞ்ஞான மேதைகளின் ஆராய்ச்சி விளைவே சினிமாவின் தோற்றம் என்று குறிப்பிட்டிருப்பது நூலாசிரியரின் பரந்த அறிவுக்கு நல்ல உதாரணமாகும்.

இந்நூலில் உள்ளஒவ்வொரு பகுதியும் சிந்தனைத் தெளிவையும் மன உறுதியையும் தரும் ஆற்றலுள்ளதாகவே அமைந்திருப்பதற்குப் பின்வரும் பகுதி தக்க எடுத்துக்காட்டாகும். ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்ற கொள்கையின் படி 'அன்பும் அறமும்' என்னும் பகுதியில் இவ்வசனங்கள் விளங்குகின்றன.

'அறம் நன்மைகள் உண்டாகும் என்பது எல்லாச் சமயத்தாரும் ஒப்புக்கொண்ட முடிவாகும். அதை மறந்துவிடுவதால் அந்த நன்மை உண்டாவதுதானே இல்லாமற் போகும் கேடு எப்படி வரும் என்ற சந்தேகம் உண்டாகலாம். பலநாள் அறம் செய்கின்றவனும் கூட ஒருநாள் அதை மறந்து கடமை தவறுவானானால் அந்தச் சமயம்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றபகைவர்களாகிய கெட்ட எண்ணங்கள் புகுந்து அதுவரையிலும் அவன் செய்த அறங்களின பயன்களையும் அழித்துவிட்டுக் கூடிய தீய ஒழுக்கத்திற்கு ஆளாகிவிடலாம்.'

திரு. முத்தையா 'இந்நூலின் ஒரேஒரு நோக்கம். மக்கள் எல்லோரும் உறுதிப்பொருளை நாடவேண்டும் என்பதுதான்' என்று முகவுரையில் குறிப்பிட்டதிற்கு ஏற்ப இந்நூல் அவரின் நோக்கத்தை ஒரளவாவது நிறைவேற்றும் என நம்பஇடமுண்டு.

இ. பொன்னம்பலவாணர்.

மனோகரா தினசரி
(யாழ். நகர்) 5
காட்சிகள்
TWO MINUTE
WARNING
(Action-Color)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
Roger Moore in
VENDATTA FOR THE
SAINT
(Action Film)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-15 7-00
சனி. ஞாயிறு 1-3
ஜெய்சங்கர்-சாவித்திரி
ஜக்கம்மா

சர்வதேச

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை இப்புதிய முத்திரை வெளியிடப்படும். இதன் பெறுமதி ஒரு ரூபாவாகும். 'ஒலிம்பிக்' சின்னத்துடன் பலவர்ணங்களைக் கொண்டு இம் முத்திரை காணப்படும்.

இச்சர்வதேச கமிட்டி மகாநாட்டில் 'ஆசியாட்' விளையாட்டு அமைப்பை ஒலிம்பிக் சர்வதேச பந்தயத்தின் ஓர் அங்கமாக மாற்றியிருப்பது குறித்தும், இந்தியாவில் 'ஒலிம்பிக்' பந்தயங்களை நடத்துவது குறித்தும் ஆராயப்படும்.

1984ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் இடம் பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது! (இ)

SANTHI (Jaffna) 24—25 Only
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
Jan Michael Vincent — Kaylenz
White - Line Fever
Action Packed Color Movie
26 முதல் நீலவானம் புதியபிரதி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுபதினம்

கடைசி இரு தினங்கள்
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ராஜா (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன்
26-3-83 முதல்
துணிவே துணை

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடிக்க
கீழ்வானம் சிவக்கும்
(கலர்)

ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
தேடிவந்த மாப்பிள்ளை
(ஈஸ்ட்மன் கலர்) (புதிய பிரதி)

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல்
கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)

றீகல் யாழ். நகர் Daily 5 Shows
Richard Thomas in
Battle Beyond the Stars

ரசிகர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

இம்மாதம் 25ந் திகதி திரையிடப்படவுள்ள திரைப்படம் "சட்டம் ஓர் இருட்டறை" தணிக்கை தலையீடு காரணங்களால் திரையிடமுடியாமல் உள்ளது. தணிக்கைச்சபையினர் இப்படத்தில், சிலகாட்சிகளை நீக்க முயற்சித்துள்ளமையே காரணமாகும். எனினும், கூடியவரை ரசிகர்களை பாதிக்காதவகையில் விரைவில் "சட்டம் ஓர் இருட்டறை" திரைப்படத்தை திரையிட முயற்சிக்கின்றோம்.

நிர்வாகம், றீகல் சினிமா.

"மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டி பயங்கரவாதத்தை ஒழிக்கலாம்"

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கருத்து

(கொழும்பு)

"பொலிஸ் சேவையில் தமிழர்கள் நியமிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். யாழ்ப்பாணத்தில் உள்ள 424 பொலிஸாரில்; 276 பேர் தமிழ்ப் பொலிஸார்" பாராளுமன்றத்தில் பேசிய பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. டி. வேரப்பிட்டியா மேற்கண்டவாறு கூறினார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு. வேரப்பிட்டியா மேலும் கூறியதாவது: "வடக்கில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டலாம் என்ற நம்பிக்கையிருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒத்துழைத்தால் நிச்சயம் இது நடக்கும்.

"பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க அணுகுமுறை தந்திரமாக இருக்கவேண்டும்.

"சட்டத்தை மதிக்கும் வடபகுதி மக்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகையே பயங்கரவாதம்.

"வடக்கில் பயங்கரவாதத்தைமுடிவுக்கு கொண்டுவர கூட்டணிக்கு துணிவுவேண்டும்.

"பயங்கரவாதத்தையிட்டு வடபகுதி மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டினால் பயங்கரவாதத்தை ஒழிக்கும் முயற்சி வெற்றிபெறலாம்.

"இதுவரை பயங்கரவாதத்திற்கெதிராக 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணத்தில் முன்னாள் பிரதி அமைச்சர் சோமவீர சந்திரசிறியின் காருக்கு குண்டு வைப்பு கொழும்பில் முன்னாள் வட்டு எம். பி. தியாகராசா கொலை முயற்சி, மேயர் துரையப்பா காருக்கு குண்டுவைப்பு சம்பவங்களோடு இந்த பயங்கரவாதம் ஆரம்பிக்கத் தொடங்கியது. [இ]

நிர்வாகிகள்

(நீர்வேலி)

ஊரெழுப் பகுதிப் பொலிஸ் பொதுமக்கள் நட்புறவுச்சங்க நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தலைவராக திரு க.ஜெகநாதனும், செயலாளராக திரு மு சங்கரப்பிள்ளையும், பொருளாளராக திரு த தம்பிராசாவும், தெரிவு செய்யப்பட்டனர்.

ஒன்பது பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

புதிய உறுப்பினர்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலைய 1983ம் ஆண்டு உத்தியோகத்தர்கள் தெரிவு விபரம் வருமாறு:-

தலைவர்: திரு இ.சபாரத்தினம்உபதலைவர்கள்; திரு கு.திரவியநாதன்,(ஆசிரியர்) திரு வே.விசுவலிங்கம், இணைச்செயலாளர்; திரு கொ.குணசிங்கம், (ஆசிரியர்) திரு கி.தவராசா (இராசா) தனாதிகாரி; திரு கு.அண்ணாமலை, நூலகர்: செல்வன் கு இரவீந்திரன், நாடக மன்றப்பொருளாளர்: திரு கு.குமாரு, மாணவர் மன்றப் பொறுப்பாளர்: செல்வன் கு. இரவீந்திரன், விளையாட்டுக் குழுத் தலைவர்: திரு கு.நடேசு

மேற்கூறிய உறுப்பினர்களுடன் நிர்வாகசபை உறுப்பினர்களும், நியமன உறுப்பினர்களும் ஆயுட் காப்பாளர்:சி. கொழுந்து காப்பாளர்களும் இணக்கசபைஉறுப்பினர்களும் கணக்குப் பரிசோதகர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இணக்கசபை உறுப்பினர்கள்: தலைவர் வே.விசுவலிங்கம் செயலாளர் கொ.குணசிங்கம் குழு த.நாகமணி, க.கார்த்திகேசு, வே.இளையகுட்டி, கி.சுந்தரம், த.கனகரத்தினம்.

கரவெட்டிப்பிரிவு 14கி.உ.சபைகளின் தலைவர்கள்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கானபுதிய கிராமோதய சபைத் தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

14 கிராமோதய சபைத்தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான இக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

கரவெட்டி மேற்கு திரு வி. எஸ்.வீரசிங்கம், கரவெட்டி வடக்கு திரு என்.பாஸ்கரன், கரவெட்டிகிழக்கு திரு எம்,வேலுப்பிள்ளை,கரவெட்டி மத்தி திரு இ.முத்துத்தம்பி, புலோலி மேற்கு திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன், புலோலி தெற்கு திரு கே,வேணுகோபால், அல்வாய்தெற்கு திரு கி. செல்வராசா, துன்னாலை தெற்கு திரு க,வ.இராஜையா, கரணவாய் தெற்கு திரு க,இரத்தினசிங்கம் கரணவாய்வடக்கு திரு வி,கே,சுப்பிரமணியம், இமையாணன், திரு க,அப்புக்குட்டி உடுப்பிட்டி திரு பி வேலுப்பிள்ளை,வல்வெட்டி திரு பொ. செல்லத்துரை, கப்புது திரு எஸ்,செல்லையா. (அ)

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை

வெள்ளி விழா மண்டபத்தில் பிரித்ஓதும் வைபவம்

(மாவிட்டபுரம்)

"பிரித்" ஓதும் வைபவத்தில் கலந்துகொள்வதும் அதனைக் கேட்பதும் பெரிதும் நன்மைபயக்கக்கூடியது. துன்பங்கள் நீங்கி மக்களிடையே அமைதி, சாந்தம் என்பன வளரும். ஆகவே இந்த வைபவங்களில் சகல மக்களும் வேறுபாடுகளைமறந்துபங்குகொள்ள வேண்டும்"

இவ்வாறு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பௌத்தசங்கத்தின் ஆதரவில் சிமெந்து தொழிற்சாலை வெள்ளிவிழா மண்டபத்தில் இடம்பெற்ற பிரித்ஓதும் வைபவத்தின்போது உரைநிகழ்த்திய காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை பிரதமகுரு வண. தெக்கலே பதுமஸ்ரீ தேரோ கூறினார்.

சிமெந்து தொழிற்சாலை பொதுத்தொழிலாளர் யூனியன் செயலாளர் திரு. நா. நடராஜா பேசுகையில்; பிரித் ஓதுவதுபோன்ற சமய பிரார்த்தனை நிகழ்ச்சிகள் தொழிற்சாலை வளவில் இடம்பெறுவதையிட்டு தொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள். இத்தொழிற்சாலையில் கடமைபுரியும் தொழிலாளர்கள் விபத்துக்களில் சிக்காமல் பாதுகாப்பாக தொழில்புரிய இப்படியான பிரார்த்தனை நிகழ்ச்சிகள்வழிவகுக்கவேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்" என்றார்.

சிமெந்து தொழிற்சாலை தொழில்முகாமையாளர் திரு. நாகராஜா, வண.நந்தாரசம நாயக்கதேரோ ஆகியோரும் பேசினர்.

"தாயகம் திரும்பும் பிரயாணிகள் சலுகைகளை துஷ்பிரயோகம் செய்யவேண்டாம்"

(மன்னார்)

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தலைமன்னார் கப்பல் மார்க்கமாகத் தாயகம் செல்லும் பிரயாணிகள் தமது பொதிகளுக்குள் கடத்தல் பொருட்களைமறைத்துவைத்து எடுத்துச்செல்லும் முயற்சியில் ஈடுபடவேண்டாம்" என்று தலைமன்னார் துறைமுக நலன் நோக்கு அதிகாரி திரு. எம். சக்கரியாஸ்தெரிவித்துள்ளார்.

"இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தாயகம் செல்லும் சில பிரயாணிகள் சிறியலாபங்களைக் கருதி சில வியாபாரிகளின் கடத்தல் பொருட்களை தமது பொதிக்குள் மறைத்து வைத்து எடுத்துச்செல்கின்றனர் இவ்வாறான முயற்சிகள் கண்டுபிடிக்கப்பட்டால் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து செல்லும் பிரயாணிகளின் பிரயாணம் தாமதமடையலாம். குடிபெயர்ந்து செல்லும் பிரயாணிகளின் பொதிகள் தலைமன்னார் துறைமுகத்தில் பரிசோதிக்கப்படுவதில்லை. இத்துடன் கப்பலில் பயணம்செய்வதற்கும் குடிபெயர்ந்து செல்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறான சலுகைகள் தொடர்ந்தும் இருக்க வேண்டுமானால் குடிபெயர்ந்து செல்பவர்கள் தமது பொதிகளுக்குள் வியாபாரிகளின் கடத்தல் பொருட்களை மறைத்துவைத்து எடுத்துச் செல்வதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

ஞானப்பிரகாசர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ஞானி ஞானப்பிரகாசர் குருபூசை இன்று திருநெல்வேலி அரசடி அம்மன் ஆலயத்தில் ஞானப்பிரகாசர் சபையினரால் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கின்றது. திருவாளர்கள் க. கி குலரத்தினம், க. தி. சம்பந்தன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர் திரு மகாலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

பாடசாலை வளவு சிரமதானம் மூலம் துப்புரவு

(வவுனியா)

நொச்சிமோட்டைக் கிராமோதய சபையினால் கள்ளிக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வளவு சுமார் 2 ஏக்கர் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

மேற்படி சிரமதானம் நொச்சிமோட்டைக் கிராமோதயசபைஉறுப்பினர் திரு பொ. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

விசேட சேவை அலுவலர் திரு வி.ஜெகசோதிநாதனும் கலந்து கொண்டார்.

மேலும் சிரமதானப்பணிகள் நொச்சிமோட்டை கிராமோதய சபைக்கு உட்பட்ட சகலகிராமங்களிலும் நடத்தப்பட இருப்பதாக விசேட சேவை அலுவலர் தெரிவித்தார். (அ)

மரண அறிவித்தல்

திருமதி மனோன்மணி முத்துத்தம்பி

திருமதி மனோன்மணி முத்துத்தம்பி (இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை) காலமானார். இவர் திரு. சி. முத்துத்தம்பி (ஆசிரியர், செங்குந்த இந்துக் கல்லூரி) அவர்களின் பாரியாரும், உமா, சுதாகர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. திருமதி ம. க. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின் மகளும், திருமதி சண்முகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி ஜெகானந்தகுரு (அதிபர், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. வீ. சண்முகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), திரு. ஜெகானந்தகுரு (யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று (24-03-83) வியாழக்கிழமை பிற்பகல் 04 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

6644 தகவல்:- சி. முத்துத்தம்பி

அஸ்ரனின்
பிறிதோர் விசேட அடிப்படை
ஆங்கில வகுப்பு
SPECIAL BASIC ENGLISH
3 மாத துரிதப் பயிற்சி

ஆங்கில அறிவைச் சரிவரப் பெறாத மாணவர்களுக்கும் உழைப்பில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், யுவதிகள் முதியவர்கள் ஆகியவர்களுக்குமென

விசேட பாட ஒழுங்குடன் அமைந்த
நவீன ஆங்கில மொழிப் போதனை

பாடநெறி:
1. ஆங்கில உரையாடல்
2. பிரயோக இலக்கணமும் வாசித்தலும்
3. கிரகித்தலும் எழுத்துப்பயிற்சியும்

கட்டணம்: ரூபா 180/- (முழுப் பாடநெறிக்கும்)
ஆரம்பம்: 2-4-83
விபரங்கள் : நேரில்/தபாலில்

ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD, JAFFNA.

இன்று நடக்கும் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

''ஆயுதப் போராட்டங்களில் மதகுருமார்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று மாலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் ''சற்றடே றிவியு'' உதவி ஆசிரியர் திரு. க. சுரேஸ் உரையாற்றவுள்ளார். (கெ)

தமிழக..:

[4ம் பக்கத் தொடர்ச்சி]

வீரசிங்கம் மண்டபத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ். கிளை நடாத்தும் பாரதி நூற்றாண்டு விழா இறுதி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகின்றனர். இவ்விழாவுக்கு மானிப்பாய்ப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் தலைமை தாங்குகின்றார். விழாவுக்கான வரவேற்புகளை திரு. டொமினிக் ஜீவா நிகழ்த்த யாழ். மாவட்ட செயலாளர் எழுத்தாளர் தெனியான் நன்றியுரை நிகழ்த்துவார்.

இலக்கிய சந்திப்பு

25-ந் திகதி வெள்ளி மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் ஆர். ஆர். பூபாலசிங்கம் இல்லத்தில் தமிழகத்திலிருந் வருகை தந்திருக்கும் எழுத்தாளர்களான பேராசிரியர் இராமகிருஷ்ணன், சிதம்பரகுநாதன், திருமதி ராஜம் கிருஷ்ணன் முதலியோருடன் யாழ் எழுத்தாளர் நடாத்தும் இலக்கிய சந்திப்பும் தேனீர் விருந்தும் இடம்பெறும். இச்சந்திப்புக்கு பிரபல எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் தலைமை தாங்குவார்.

இப்படியும் நடக்கிறது

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இரவு ஒரு முக்கிய பொதுக்கூட்டம் நடந்தது.

''...இலங்கையில் இந்து சமயம் ஏதோ வளர்ச்சிபெற்று வருவதாகக் கூறமுடியாது. ஏனைய சமயங்களுக்கு உள்ள உரிமைகள் இந்துசமயத்துக்கு இங்கு கிடைத்துவிட்டதாகப் பெருமைப்படமுடியாது இந்த அரசு இந்து சமயத்துக்கு முக்கியத்துவம் எதுவும் கொடுக்கவில்லை..., மதமாற்றங்களும் நடைபெற்று வருவது கவலையளிக்கிறது...'' என்று அந்த சுவாமிகள் வருத்தப்பட்டார்.

சுவாமிகளை முதலில் வரவேற்ற அமைச்சர் 'இராசு' திடீரென மேடைக்கு ஏறி, மொழிபெயர்ப்பாளரிடம் ஏதோ கூறினார்.

சுவாமிகள் மொழிபெயர்ப்பாளரை வினவினார்.

''பேச்சை நிறுத்துமாறு பணிக்கிறார்'' என்றார் மொழிபெயர்ப்பாளர்.

அங்கு 'நிரம்பி வழிந்த' மக்களைப் பார்த்து சுவாமிகள், ''நான் பேசவேண்டுமா? அல்லது நிறுத்தலாமா?'' என்று கேட்டார்.

''பேசுங்கள் பேசுங்கள்'' நகர மண்டபம் அதிர்ந்தது.

சுவாமிகள் மேலும் ஒரு மணி நேரம் அருளுரை வழங்கினார். அமைச்சரும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தாராம்.

— 'ஊடுருவி'

இந்துசமய ஆராய்ச்சிநிலையம் திறப்புவிழா ஒத்திவைப்பு.

[கொழும்பு]

இன்று திறந்து வைக்கப்படவிருந்த அனைத்துலக இந்து சமய ஆராய்ச்சி நிலையம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செ.இராசதுரை அறிவித்துள்ளார்.

இந்த நிலையத்தை இன்று தவத்திரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் திறந்து வைக்கவிருந்தார்.

'நீலனு'க்குத் தொடர்ந்து பாராட்டு

[கொழும்பு]

''வட்டுக்கோட்டையின் புதிய எம். பி. யாக டாக்டர் நீலன் திருச்செல்வத்தை இங்கு பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அவரது தந்தையாரையும், அவரையும் எனக்கு மிக நன்கு தெரியும்'' என்று பொது நிர்வாக அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம தெரிவித்தார், 'பட்ஜட்' மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே அவர் குறிப்பிட்டார்.

டாக்டர் நீலன் திருச்செல்வம் நியாயமான நடுநிலையான ஒரு மனிதர். அவ்விதமான ஒருவரை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் புதிய எம். பி யாக நியமித்திருப்பது வரவேற்கத்தக்கது'' என்று அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டார்.

பத்திரிகையாளர்..:

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரு பத்திரிகையாளர்களும் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் இவ்விருவரது புகார்களும் திங்களன்று பதிவுசெய்யப்பட்டது.

பாராளுமன்றத்தில்......

(1ம் பக்கத் தொடர்ச்சி

மதித்துப் பாராட்டுகிறோம்'' என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நேற்று பாராளுமன்ற 'பட்ஜட்' ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். (இ)

நவம் யோசனை :...

(1ம் பக்கத் தொடர்ச்சி

திறந்துவைக்கப்படவிருந்து ஒத்திவைக்கப்பட்ட அனைத்துலக இந்து சமய ஆராய்ச்சிநிலையம் பற்றியும் அமைச்சர் குறிப்பிட்டார். இந்தியாவிலிருந்து இன்னும் சில பொருட்கள் வர வேண்டியிருப்பதால் திறப்பு விழா ஒத்திப்போடப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

மகாதேவா தாம்போதி வேலைகளுக்கு தமது அமைச்சு கடந்த ஆண்டு நிதி ஒதுக்கியது பற்றி அமைச்சர் குறிப்பிட்டபோது, இந்த ஆண்டும் பத்து லட்சம் ரூபா ஒதுக்குவீர்களாவென்று யாழ்ப்பாணம் எம். பி. திரு யோகேஸ்வரன் கேட்டார். இந்த ஆண்டும் நிதி வழங்குவேன் என்று அமைச்சர் பதிலளித்தார்.

சாவகச்சேரி பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது, திருக்கோணேஸ்வர ஆலயப் பகுதியைப் புனிதநகரமாக்கும்படி கோரிக்கை விடுத்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. இதற்கு அமைச்சரைக் குறைகூறிப் பயனில்லை. அமைச்சருக்கு அதிகாரம் இல்லை. அதற்காக வேதனைப்படுகின்றோம் என்றார்.

அகில உலக இந்து மகாநாட்டை அமைச்சர் நடத்தினார். ஆனால் இந்து சமய சூழ்நிலையில் அதனை அவர் நடத்தவில்லை. [இ]

இன்று
மங்களகரமான ஆரம்பவிழா
புனிதா
ஜுவல்லரி மாட்
32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
இன்று 24-03-1983 வியாழக்கிழமை
காலை 9-30 மணிக்கு மேல்வரும் சுபவேளையில்
ஆரம்பித்து வைக்கப்படும்.
அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள்
ஆதரவாளர்களை அன்புடன் அழைக்கிறோம்.
★ தனிப்பட்ட அழைப்புகள் இல்லை ★ 6577

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
உல்லாச பஸ்சேவை
தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-
(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310
(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537
(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596
(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல: 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190
(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.
(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல: 22830
(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல: 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 00236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.